# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம்

MSSRF
Science for Sustainable Development

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | தேனி | காலம் : | 05/11/2022 | முதல் | 09/11/2022 |
| அறிக்கை எண் : | 088/ 2022 | வெளியீட்டு நாள் : | | 04/11/2022 | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 32° - 34° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 23° - 24° செல்சியஸ் ஆகவும் பதிவானது. மேலும் மழை பெறப்பட்டது.

| கடந்தவார வானிலை (31.10.2022 முதல் 03.11.2022) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 09-11-2022- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30/10 | 31/10 | 01/11 | 02/11 | 03/11 | தேதி | நாள்-5 05/11 | நாள்-5 06/11 | நாள்-5 07/11 | நாள்-4 08/11 | நாள்-5 09/11 |
| 0.1 | 0.0 | 0.0 | 2.8 | 28.7 | மழை (மி.மீ) | 30 | 10 | 8 | 6 | 0 |
| 32 | 33 | 34 | 32 | 34 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 28 | 28 | 29 | 29 | 29 |
| 23 | 23 | 24 | 23 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 19 | 20 | 20 | 19 | 18 |
| 6 | 4 | 7 | 6 | 7 | மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 6 | 4 | 4 |
| 81 | 76 | 78 | 80 | 89 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 85 | 85 | 80 | 80 | 80 |
| 92 | 61 | 63 | 70 | 77 | | 70 | 70 | 70 | 60 | 60 |
| 3 | 7 | 5 | 4 | 3 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 4 | 4 | 4 | 4 | 4 |
| கிழக்கு கு | வட கிழக்கு கு | வட கிழக்கு | தென்மே மேற்கு | கிழக்கு | **காற்றின் திசை** | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் நவம்பர் 5, 6, 7 தேதி மிதமான மழையும், 8 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 28°-29° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 18°-20° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 4 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## கனமழை எச்சரிக்கை:

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் நவம்பர் 5 தேதி கன மழை முதல் மிக கன மழையும் 6 மற்றும் 7 தேதி கனமழை பெய்ய வாய்ப்பு. விவசாயிகள் துரிதமாக செயல்பட்டு நீர் வரத்து வாய்க்கால்கள், பண்ணைக்குட்டைகள் மற்றும் நீர்நிலைகளை சரிசெய்து மழைநீர் சேகரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும். இந்த காலகட்டத்தில், உரமிடுதல் மற்றும் பூச்சிமருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்தி வைக்கும்படியும், விளைநிலங்களில் மழைநீர் தேங்கி பயிர்களை சேதப்படுத்தாத அளவில் தேவையான வடிகால் வசதிகளை ஏற்படுத்தி கொள்ளும்படியும்,

கால்நடைகளை மேய்ச்சலுக்கு வெளியில் அனுப்பாமலும், மின்கம்பம் மற்றும் மரங்களில் கட்டாமலும் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கும்படியும் கேட்டுகொள்ளப் படுகிறார்கள்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள்** : மிளகாய், வாழை, கால்நடை.

மிளகாய்:

- மிளகாய் பயிரில் போரான் சத்து பற்றாக்குறை நிவர்த்தி செய்ய போராக்ஸ் (3 கிராம்/லிட்டர்) கரைசலை அறிகுறிகள் மறையும் வரை 10 நாட்கள் இடைவெளியில் இலை வழியாகத் தெளிக்க வேண்டும்.

வாழை:

- வாழையில் நூற்புழு கட்டுப்படுத்த வாழை கட்டை நடுவதற்கு முன்பு 10 லிட்டர் தண்ணீருக்கு 5 மில்லி என்ற அளவில் இமிடாகுளோபிரிடு மருந்தினை கலந்து அதில் வாழைக் கட்டையின் தூர் பகுதியை நன்கு நனைத்து பிறகு நடவு செய்ய வேண்டும்

கால்நடை:

- தற்போது நிலவும் பருவச்சூழலில் மாடுகளில் சப்பை நோய் தாக்குதலுக்கான வாய்ப்புகள் உள்ளது.
- இந்நோய் காற்றின் ஈரப்பதம் கூடுதலாகவும் உள்ள பகுதிகளிலுள்ள மாடுகளைப் பெரும்பாலும் பாதிக்கிறது.
- இதுவும் ஓர் மழைக்கால நோயாகும். நல்ல ஆரோக்கியமான திடமான, 6 மாத வயது முதல் 3 ஆண்டு வயது வரை உள்ள இளம் மாடுகளை அதிகம் பாதிக்கிறது.
- நோய்க் கண்ட 24 மணி நேரத்தில் உடனடியாக மருத்துவம் செய்யாமல் போனால், மாடுகள் இறந்து விடும். கால்நடை மருத்துவரின் உதவியுடன் உடனடியாக மருத்துவம் செய்ய வேண்டும்.